ஏப்ரல் 10

# புனித பேதா (673-735)

இவர் ஏழு வயதில் புனித ஆசீர்வாதப்பரின் சபையில் சேர்ந்து 55 ஆண்டுகளை அங்கு செலவழித்தார். எழுவதிலும், செபிப்பதிலும், படிப்பதிலும், போதிப்பதிரும் தம் வாழ்நாளை செலவழித்தார். மடத்தின் ஒழுங்குகளை நுணுநுணுக்கமாக அனுசரிப்பார். வேதாகமத்தைப் படித்து ஆராய்ந்தார். கோவிலில் சங்கீதங்கைப்பாட சந்நியாசிகளுக்கு கற்பிப்பார். இவர் பக்திமான், அறிஞர், சாந்த குணமுள்ளவர், எனவே நூற்றுக்கணக்கான மாணவர்கள் இவரிடம் கல்வி கற்க சென்றார்கள். செபிக்கும்போது சில சமயங்களில் கண்ணீர் வடிப்பார். அநேக மணி நேரத்தில் செபத்தில் செலவழிப்பார். வாழ்வின் இறுதி ஆண்டுகளில் நோயால் தொல்லைப்பட்டார். எனினும் செபித்தார், உழைத்தார்.

சிந்தனை:

“தன் அயலான் மீது தூய அன்பு கொண்டிருக்கிறவனே கடவுளை சிறந்த விதமாக நேசிக்கிறான்”.

செபம்:

ஆண்டவரே, செபத்தையும் உழைப்பையும் மக்கள் அனைவரும் நேசிக்கச் செய்யும்.